## DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No : C.C. 324/2023

**Prosecution witness : எ.ம.சா. 1** **Date : 13.02.2024**

| | |
|---|---|
| **Name : சுதாகர்** | **Taluk : மேட்டூர்** |
| **Father's Name : சுப்ரமணி** | **Calling : சுயதொழிலாளி** |
| **Village : சுப்ரமணியபுரம்** | **Age : 36** |

**(Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் பாலாஜி பேஷன் என்ற பெயரில்தான் பின்னலாடை நிறுவனத்தை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். நான், சுரேஷ், சக்தி ஆகியோர் முன்னர் நடத்தி வந்தோம். தற்போது இல்லை. நாங்கள் மூன்று பேரும் மேற்படி நிறுவனத்தை கூட்டாக நடத்தியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கூட்டாண்மை ஆவணத்தில் என் பெயரும், சக்தி பெயரும் தான் இருந்தது. சுரேஷ் silent partner ஆக தான் இருந்தார். கூட்டாண்மை நிறுவனத்தில் நபர் ஒருவருக்கு எவ்வளவு தொகை முதலீடு செய்தோம் என்றால் முதலில் நபர் ஒன்றுக்கு ரூ. 4,50,000/-. எங்கள் வியாபாரத்தில் லண்டன் நிறுவனத்திலிருந்து எவ்வளவு தொகை வரவேண்டியுள்ளது என்றால் ரூபாய் 48 லட்சத்திலிருந்து 50 லட்சம் வரை. அந்த நிறுவனத்திலிருந்து பணம் வரவேண்டியது காலதாமதம் ஆனதால்தான் எனக்கும், பங்குதாரர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரிதான். இதனால் எங்கள் கூட்டாண்மை நிறுவனத்தை 2020 ல் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். அதன்படி ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பங்குத்தொகை பிரித்துக்கொடுக்கிறோம் என்று முடிவுசெய்துள்ளோம். சுரேஷ் என்பவருக்கு ரூபாய் 12,50,000/- பிரித்து கொடுக்கிறோம் என்று முடிவுசெய்திருந்தோம். சக்தி என்பவருக்கு

ரூபாய் 1,50,000/– நானும், சுரேஷ் சேர்ந்து கொடுக்கவேண்டியது என்று முடிவுசெய்திருந்தோம். கூட்டாண்மை நிறுவனத்தை முடிவுக்கு கொண்டுவர 04.06.2022 ம் தேதி தொகை செலுத்தப்பட்டிருக்கிறது என்றும், அதனால்தான் வங்கி பரிவர்த்தனை கணக்கு பட்டியல் எ.ம.சா.2 ல் partnership disclosed settlement என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் ஆரம்பம் முதலே நிறுவனம் ஆரம்பிக்கப்படும் போதிலிருந்து சுரேஷ்ற்கும், எனக்கும் இருந்த வரவுசெலவிற்காக தான் அன்று தொகை செலுத்தப்பட்டது. அந்த வரவுசெலவிற்காக தான் காசோலை கொடுக்கப்பட்டது. எ.ம.சா.1 ல் மாதங்கள் மற்றும் தேதி அனைத்தும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. 04.06.2022 ல் கணக்குகள் எனக்கும், சுரேஷ்ற்கும் முடிந்தபின்பு காசோலையை எழுத்துபூர்வமாக திருப்பி கேட்டேனா என்றால் இல்லை. நேரில்தான் கேட்டேன். காசோலை வசூலுக்கு தாக்கல்செய்யப்பட்டால் நிறுத்தி வைக்ககோரி வங்கி கிளையில் கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை. 2022 க்கு பின்னிட்டு நான் அந்த கணக்கை உபயோகம் செய்யவில்லை. உண்மையில் சுரேஷ் காசோலையை தரமறுத்திருந்தால் நான் புகார் அளித்திருப்பேன் என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நானும், சுரேஷ் உறவினர்கள் என்பதால் புகார் அளிக்கவில்லை. நானும், சுரேஷ்ம் கூட்டாளி என்பதால் எ.ம.சா.1 ஆவணத்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள வாசகங்கள் என்னால் நிரப்படவில்லை. எனக்கு தொழில் ரீதியாக நெருக்கடிகள் இருந்ததால் அதனை சமாளிக்க வாதியிடம் ரூபாய் 15 இலட்சம் நவம்பர் 2022 ம் ஆண்டு கடனாக பெற்றேன் என்றால் சரியல்ல. லண்டன் நிறுவனத்திலிருந்து தொகை வந்த பின்னிட்டும், வங்கியில் லோன் வந்தவுடன் பணத்தை 3 மாதத்தில் திருப்பி தருவதாக கூறி வாதியிடம்

தொகையை கடனாக பெற்றேன் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு அவர் பலமுறை என்னிடம் தொகையை திருப்பிதரச்சொல்லி நேரிலும், போனிலும் பேசி கேட்டார் அதனால் 15.05.2023 ம் தேதியிட்டு ரூபாய் 15 இலட்சரூபாய் காசோலையை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தால் பணமாகிவிடும் என்று கூறியதால் கொளத்தூர் பாரத ஸ்டேட் வங்கியில் காசோலையில் தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தார் அது போதிய பணமில்லை என்று 18.05.2023 ம் தேதி திரும்ப வந்துவிட்டது என்றும், அதானல் 26.05.2023 அன்று என்னுடைய அலுவலக முகவரிக்கும், வீட்டு முகவரிக்கும் அறிவிப்பு அனுப்பினார் என்றால் என்னுடைய அலுவலக முகவரிக்குதான் அறிவிப்பு வந்தது. அறிவிப்பு வந்தவுடன் 15 நாளில் தொகை செலுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் தொகை வாங்கவில்லை, அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. கோவைக்கும், எனது ஊருக்கும் பயணநேரம் எவ்வளவு என்றால் 4 மணிநேரம் இருக்கும். அந்த தேதியில் நான் மாமியார் வீட்டில் இருந்தேன் என்பதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி மட்டும்தான் சொல்லியுள்ளேன். ஆவணங்கள் ஏதும் தரவில்லை. இந்த வழக்கில் மறுப்பை சொல்லவேண்டும் என்பதற்காக ஒரு பொய்யான தகவலை ஆதராமில்லாமல் முன்னிலைப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய விரிவான பணபரிவர்த்தனை, தொழில்முறைகள் ஆகியவற்றை பொருத்துதான் அவர் கடனாக கொடுத்தார் என்றும், அவர் நம்பிக்கையை கெடுக்கும் விதமாக காசோலையை கொடுத்து அதை பணமாக்காமல் இருந்துவிட்டேன் என்றும், அதனால் மாற்றுமுறை ஆவணச்சட்டப்படி நான் குற்றம் புரிந்துள்ளேன் என்றும், அதனால் சட்டப்படி தண்டனை மற்றும் இழப்பீடு புகார்தாரருக்கு கிடைக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**